## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## &
## இந்தியவானிலைத்துறை
### வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
### திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
### (17.07.2021 முதல் 21..07.2021 )

**அறிக்கை எண் 057/2021** **தேதி. 16.07.2021**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 29°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 20°செ முதல் 28°செ ஆகவும்,கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 14°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (13.07.2021 முதல் 15.07.2021) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு - 21 07.2021- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13/07 | 14/07 | 15/07 | தேதி | நாள் - 1 17/07 | நாள் - 2 18/07 | நாள் - 3 19/07 | நாள் - 4 20/07 | நாள் - 5 21/07 |
| 0.3 | 0.3 | 5.0 | மழை (மி.மீ) | 5 | 8 | 6 | 4 | 2 |
| 31 | 32 | 31 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 30 | 30 | 30 | 30 | 31 |
| 22 | 22 | 21 | குறைந்த பட்ச வெப்நிலை (°செ) | 23 | 23 | 23 | 23 | 23 |
| 7 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 7 |
| 93 | 85 | 82 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 85 |
| 51 | 67 | 87 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 60 | 60 | 65 | 60 | 60 |
| 17 | 19 | 10 | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | 10 | 10 | 15 | 12 | 15 |
| 270 | 230 | 230 | காற்று வீசும் திசை | 230 | 230 | 230 | 230 | 230 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (17. 07.2021 முதல் 21 07.2021 )**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேக மூட்டத்துடன் காணப்படும். மேகமூட்டமான வானிலையுடன் வரும் நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை பொழிய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ முதல் 31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 85 முதல் 90 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 60 முதல் 65

சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 முதல் 15 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் தென் மேற்கு திசையில் வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | மேற்கு மலையடிவாரங்களில் மிதமான மழையும், உள் மாவட்டங்களில் லேசான மழையும் பொழிய வாய்ப்புள்ளதால் நீர் பாசனத்தினை தள்ளிவைக்கவும். போதிய வடிகால் வசதி மேற்கொள்ள வேண்டும்.<br>மழையுடன் காற்றின்வேகமும் மணிக்கு 15 கி.மீ மேல் காணப்படுவதால் கரும்பு, வாழை மற்றும் உயரமான மரக்கன்றுகளுக்கு போதிய முட்டு கொடுக்க வேண்டும். |
| சோளம் | வளர் பருவம். | வரும் நாட்களில் 15 மி.மீ மழை கிடைக்கப்பெற்றால், மானாவாரி சோளத்திற்கு ஒரு ஹெக்டருக்கு 25 கிலோ யூரியா இட வேண்டும். |
| கரும்பு | வளர் பருவம். | மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் கரும்பு பயிர் சாயாமல் தவிர்க்க தோகை உரித்து விட்டம் கட்டுதல் வேண்டும். |
| பூசணிக்கொடிகள் | நிலம் தயாரித்தல் | ஜீலை 20 முதல் 30 ம் தேதி வரை கொடி வகை காய்களை விதைப்பதற்கு ஏற்ற தருணம். எனவே பெறப்படும் மழையைப் பயன்படுத்தி விதைப்புக்கான குழிகளை தயாரிக்க வேண்டும். |
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் 15 கிமீக்கு மேல்அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்க வேண்டும். |
| கால்நடைகள் | | நிலவும் வானிலையில் கறவை மாடுகளில் மடிவீக்க நோயினை கட்டுப்படுத்த பொட்டாசியம் பர்மாங்கனேட் கொண்டு பால் மடியை கறப்பதற்கு முன்னும் பின்னும் சுத்தம் செய்ய வேண்டும்.<br>அதிகப்படியான காற்றின் ஈரப்பதம் காரணமாக கால்நடைகளுக்கு ஏற்படும் நாவறட்சியை தடுக்க சுத்தமான குடிநீரை வழங்க வேண்டும். |

**குறுஞ்செய்தி**

- வரும் நாட்களில் 15 மி.மீ மழை கிடைக்கப்பெற்றால், மானாவாரி சோளத்திற்கு ஒரு ஹெக்டருக்கு 25 கிலோ யூரியா இட வேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**